# இலங்கையின் பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்ப விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம்!

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



தமிழர்கள் அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வளமான அறுவடையையும், புதிய ஆரம்பத்துக்கான நம்பிக்கையையும் தைப் பொங்கல் திருநாள் குறிக்கிறது. தமிழ் நாட்காட்டியின்படி தை மாதத்தில் சூரியன் வடக்குக்கு நகரும்போது, நிகழும் மங்களகரமான அறுவடைக் காலத்தின் ஆரம்பமாக தைத்திருநாள் அமைந்துள்ளது.

இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக சோழர்களின் ஆட்சிக்காலத்தில் வருடத்தின் முதலாவது அறுவடைக்காக தைப்பொங்கல் பண்டிகை கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

அறுவடையின் செழுமைக்கு வித்திட்ட இயற்கை, கால்நடைகள் உள்ளிட்ட அனைத்துக்கும் மனதார நன்றி கூறுவதே பண்டிகையின் நோக்கமாகும்.

இரண்டு வருடங்களாக விவசாயிகளின் அர்பணிப் புக்களுக்கு மத்தியில் நாடு வெற்றிப் பாதைக்குள் பிரவேசிக்கும் வேளையில் தைப்பொங்கல் பண்டிகை இம்முறை கொண்டாடப்படுகிறது. வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம்.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. அந்த அனைத்து பணிகளும் வெற்றியளிக்க இம்முறை தைப்பொங்கல் தினத்தில் இயற்கையின் ஆசிர்வாதம் கிட்ட வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

அதேபோல் தைப்பொங்கல் நமக்கு சகவாழ்வையும் மதிப்பையும்2 ►

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 01 திங்கட்கிழமை 15.01.2024 கதிர் 158

14ஆவது
யாழ் சர்வதேச
வர்த்தகக் கண்காட்சி
முற்றவெளி
மைதானத்தில்
JANUARY
19 | 20 | 21
JITF 2024
14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR

## இ.போ.ச பருவகால அட்டைக்கான தேவை இரு மடங்காக அதிகரிப்பு

*அமைச்சர் பந்துல தெரிவிப்பு*



2022 ஆம் ஆண்டை விட கடந்த 2023 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளில் பயணம் செய்வதற்குரிய பருவகால அட்டைக்கான தேவை கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர்2 ►

## சவாலான ஆண்டைத் தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகள் நிறைந்த மற்றொரு ஆண்டை நாங்கள் எதிர்கொள்கிறோம்!

*பொங்கல் வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர்*



இலங்கைவாழ் மற்றும் உலகெங்கிலும் உள்ள இந்து மக்கள் இயற்கைக்கு நன்றி செலுத்தும் முகமாக பக்தியுடனும் மரியாதையுடனும் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாள் தொடர்பில் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நிலையில், மானுட வளர்ச்சியின் தொடக்கத்தில் இருந்து நாம் இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கிறோம். உலகிற்கு உயிர் கொடுக்கும் சூரிய பகவானை வழிபடுவது பண்டைய காலத்திலிருந்தே நடந்து வருகிறது. தைப்பொங்கல் பண்டிகை இந்த சூரிய பகவான் மீதுள்ள அபரிமிதமான நம்பிக்கை மற்றும் மரியாதைக்காக நடத்தப்படும் ஒரு சிறப்பு விழாவாக இந்த தைப்பொங்கள் திருவிழாவை சுட்டிக்காட்டலாம்.

தைப்பொங்கல், பெரும்பாலும் இந்து2 ►

## காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா



யாழ்ப்பாணம் காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா இன்று இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலக இணைப்பாளர் க.கருணாகரனின் ஒருங்கிணைப்பில், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வின் பங்குபெற்றுதலுடன் காலை 10 மணிக்கு இந்த விழா ஆரம்பமாகி நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் வியாவில் வாழ் மக்கள், வர்த்தக சமூகத்துடன் வெளிநாட்டு வாழ் உறவுகளும் இணைந்து கொண்டனர்.

## 13வது திருத்தம் உயிர் பெறுவதைத் தடுக்க தேசிய சக்திகள் ஒன்றாக எழ வேண்டும்!

*கலாநிதி குணதாச அமரசேகர அழைப்பு*

13வது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியை முறியடிக்க அனைத்து தேசிய சக்திகளும் ஒன்றாக எழ வேண்டும், என தேசிய அமைப்புகளின் ஒன்றிய அமைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர தென்னிலங்கை ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நாடாளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு தயாராகி வரும் உண்மையை கண்டறியும் மற்றும் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் இறுதி இலக்கு 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதே என அவர் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் சில பிக்குமாரின் ஆதரவுடன் அண்மையில் வெளியிடப்பட்ட இமாலய விஞ்ஞாபனம் அந்தச் செயற்பாட்டின் முதற்படி எனத் தெரிவித்துள்ள குணதாச அமரசேகர, உண்மையைக்கண்டறியும்ஆணைக்குழு சட்டத்தினை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரும் போது அரசாங்கத்தை ஆதரிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (ரெத-38)

## நாளை யாழில் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு

தமிழர்களின் பட்டிப் பொங்கலன்று மட்டு மயிலத்தமடு பசுக்களுக்கும் காளைகளுக்கும் இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து யாழில் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர்2 ►

## பாவனையாளர்களின் காதில் பூசுற்றும் மின்சார பட்டியல்! மின்சார சபையின் நடவடிக்கை குறித்து பலத்த சந்தேகம்

இலங்கை மின்சார சபையின் சில பாவனையாளர்களுக்கு மாதாந்த அடிப்படையில் வழங்கப்படும் மின்சாரக் கட்டணத்தில் பாவனையாளர் தெரிந்து கொள்ள வேண்டிய அத்தியாவசியத் தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படாமையின் காரணமாக பாவனையாளர்கள் பாரிய சிரமங்களுக்கு ஆளாகியிருப்பதாக2 ►

## தைத்திருநாள் வாழ்த்துகள்!

மாலைக்கதிர் வாசகர்கள்,
விளம்பரதாரர்கள், பணியாளர்கள்
அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல் வாழ்த்துகள்!



தை பிறந்துவிட்டது - துன்பங்கள் நீங்கி,
அனைவருக்கும் நல் வழியும் பிறக்கட்டும்!

# தேசிய நல்லிணக்கம் முக்கியமானது! யாழில் நீதி அமைச்சர் தெரிவிப்பு



நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு தேசிய நல்லிணக்கம் முக்கியமானது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

இரண்டு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச இன்று யாழ் ஆரியகுளம் நாக விகாரையில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்பொழுது நாட்டில் சுமுகமான நிலை காணப்படுகின்றது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மிகவும் இக்கட்டான காலத்தில் நாட்டினை பொறுப்பெடுத்து நாட்டினை முன்னோக்கி கொண்டு செல்வதற்குரிய வேலைத்திட்டங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளார்.

அதன் காரணமாக தற்பொழுது நாட்டில் சுமுகமான நிலை காணப்படுகின்றது. எனினும் நாட்டில் மேலும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் மற்றும் மதங்களுக்கு இடையே நல்லிண்ணக்கம் ஏற்படுமிடத்து நாட்டினை மேலும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும், எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண நாகவிகாரையில் தேசிய நல்லிணக்க சபையின் அங்கத்தவர்களுக்கான நியமனச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்றைய தினம் நீதி அமைச்சர் தலைமையில் நாகவிகாரையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மும்மதத் தலைவர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (01)

# கடந்த 24 மணித்தியாலங்களில் 1,468 சந்தேக நபர்கள் கைது

கடந்த 24 மணித்தியாலங்களில் நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களின் குற்றப் பிரிவுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட 42,248 சந்தேக நபர்களின் பட்டியலில் 1,468 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுள் நச்சு போதைப்பொருள் குற்றங்களுக்காக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 254 சந்தேக நபர்களும், மற்ற நச்சுத்தன்மையற்ற போதைப்பொருள் குற்றங்களுக்காக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 942 சந்தேக நபர்களும் உள்ளங்குகின்றனர்.

மேலும், கைரேகைகள் மூலம் அடையாளம் காணப்பட்டு இதுவரை கைது செய்யப்படாத 123 சந்தேக நபர்களும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய வன்முறைக் குற்றங்கள் தொடர்பாக இதுவரை அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்படாத 149 சந்தேகநபர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாவனையாளர்களின் காதில்.......

தெரிய வருகின்றது.

கடந்த மாதம் மொபைல் போனுக்கு அனுப்பப்பட்ட மின் கட்டண விபரங்களில், பயன்படுத்திய அலகுகளின் எண்ணிக்கை, கட்டணத்திற்குரிய மாதம், நிலுவை தொகை உள்ளதா? குறித்த மின்சார பட்டியல் சிகப்பு அறிவித்தலா? போன்ற எந்தவொரு தகவலும் காணப்படவில்லை என பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மின்சார சபையின் இந்த நடவடிக்கை குறித்து பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாவனையாளர்கள் சார்பில் சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்படுவதாகவும் அறிய வருகின்றது. (ரெத-36)

## நாளை யாழில் கவனயீர்ப்பு.......

கட்டமைப்பின் சார்பில் தென்கயிலை ஆதீன தவத்திரு அகத்தியர் அடிகளார் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில், மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல்தரையில் அத்துமீறி குடியேறவும் பயிர்செய்யவும் முனையும் ஆக்கிரமிப்பாளர்கள், தொடர்ச்சியாக அங்கு மேய்ச்சலில் ஈடுபடும்பசுக்களுக்கும்காளைகளுக்கும்சொல்லொணாத் துயரங்களை ஏற்படுத்தி வருகின்றனர்

வெங்காய வெடி வைத்து அவற்றின் வாயில் கொடும் காயங்களை ஏற்படுத்தி அவை உணவு உண்ணக்கூட முடியாத, வார்த்தையால் வடிக்க முடியாத கொடுமைகளை வாயில்லா ஜீவன்களுக்கு ஏற்படுத்தி வருகின்றனர்.

அதனை விட சுட்டும், வெட்டியும், மின்சாரம் பாய்ச்சியும் இந்த பசுக்களுக்கும் காளைகளிற்கும் ஏற்படுத்தப்பட்டு வரும் கொடுமைகள் பூரணமாக நிறுத்தப்பட வேண்டும்.

அரசினால்அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும், நீதிமன்றத் தீர்ப்புக்களும் முறையாக அமுல் செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட்டு, பட்டி மேய்ச்சல் தரைகளிலிருந்து அனைத்து சட்டவிரோதிகளும் அகற்றப்பட வேண்டும்.

மேய்ச்சல் நிலத்தில் எந்தவொரு பிற நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

இவற்றை ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் குரலாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பாக அரச இயந்திரத்திற்கு ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம்.

சொல்லொணாத் துயரை சந்தித்துள்ள கிழக்கின் பண்ணையாளர்களையும் பசுக்களையும் பாதுகாக்க அனைவரும் அணி திரள்வோம்.

தமிழர்களின் பசுக்களிற்கும் காளைகளிற்கும் பொங்கலிட்டு நன்றி செலுத்தும் உயரிய நாளில் அனைவரும் எமது உணர்வுகளை வெளிக்காட்ட யாழ் நல்லை ஆதீன முன்றலில் பட்டிப் பொங்கலான எதிர்வரும் 16ம் திகதி செவ்வாய் மாலை 5 மணிக்கு, ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் கவனயீர்ப்பில் அனைவரையும் பங்கு கொண்டு கிழக்கின் மயிலத்தமடுவில் தொடர்ச்சியாக நடைபெறும் போராட்டங்கள் வெற்றிபெற வலுச்சேர்க்குமாறு வேண்டுகின்றோம் – என்றுள்ளது.

## சவாலான ஆண்டை.......

சமூகத்தில் ஆன்மீக வாழ்க்கை முறைக்கு நேர்மறையான அதிர்வுகளைக் கொண்டுவரும் ஒரு பண்டிகையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மனிதர்களுக்கும் இயற்கை உலகிற்கும் இடையிலான சிக்கலான தொடர்புக்கு நன்றி தெரிவிக்க ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது.

தேசத்தின் பொருளாதாரப் போராட்டங்களால் குறிக்கப்பட்ட ஒரு சவாலான ஆண்டைத் தொடர்ந்து, பல்வேறு பிரச்சினைகள் நிறைந்த மற்றொரு ஆண்டை நாங்கள் எதிர்கொள்கிறோம்.

இனம், மதம், ஜாதி, குலம் என்ற வேறுபாடின்றி இந்த சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான இயற்கையின் ஆசீர்வாதங்களை இந்தத் தைப்பொங்கள் தினத்தில் பெற்று உலகின் முதல்தர நாடாக மாறுவதற்கான புதிய பயணத்திலும் புதிய மாற்றத்திலும் இணைந்து கொள்ளுமாறு உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களை இத்தருணத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன், என்று அவர தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின்......

போதிக்கிறது. அதற்கமைய நாட்டின் எதிர்காலத்துக்கான புதிய எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்கு ஒருதாய் மக்களாக முன்னேற்றம் அடைய வேண்டும் என அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்ளும் அதேநேரம், தமிழர்கள் அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இ.போ.ச பருவகால .......

பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தம் 2 இலட்சத்து 80 ஆயிரம் பருவகால அட்டைகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2023 ஆம் ஆண்டில் அது 4 லட்சத்து 40 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

மேலும், 2022ஆம் ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு 6,680 பருவகால அட்டைகள் வழங்கப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டில் அது 15,260 ஆக அதிகரித்துள்ளது.

அத்தோடு, 2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்காக மாதாந்தம் 6,552 பருவகால அட்டைகள் வழங்கப்பட்டதுடன், 2023ஆம் ஆண்டில் அது 8,190 ஆக அதிகரித்துள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, 2022 ஆம் ஆண்டை விட கடந்த 2023 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளில் பயணம் செய்வது தொடர்பில் மாதாந்த பருவகால அட்டைகளுக்கான தேவை கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளமையை காண முடிகின்றது, எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ரெத-37)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தமிழ்ப் பண்பாட்டின் தனிப்பெரும் அடையாளம் பொங்கல் திருநாள்! கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் பொங்கல் வாழ்த்துச் செய்தி

(ஹஸ்பர் ஏ.எச்)

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது மக்களின் நம்பிக்கை அந்த நம்பிக்கையுடன் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்ற அனைவருக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

"இலங்கைவாழ் தமிழர்கள் மற்றும் உலக தமிழர்கள் அனைவருக்கும் அறுவடை திருவிழாவான தை பொங்கலை இன்று கொண்டாடுகின்றனர். தமிழர்களுக்கு தை பொங்கல் பண்டிகை புதிய வருடத்தின் தொடக்கமாகவும் உள்ளது. தமிழ்ப் பண்பாட்டின் தனிப்பெரும் அடையாளமான திருநாளாகவும் பொங்கல் திகழ்கிறது.

சூரியனுக்கும் இயற்கைக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்த கொண்டாடப்படுகின்ற இந்த தைப்பொங்கல் நன்நாளில் அனைவரும் அன்பு, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை மற்றும் பிறருக்கு உதவி செய்யும் நற்பண்புகளை அனைவரிடத்தும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

தை பொங்கல் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் அனைத்து உயிர்களும் சமம் என்பதையும் போதிக்கிறது. தை பொங்கலுடன் தமிழ் மக்கள் வாழ்வில் புதிய எதிர்பார்ப்புகள் பிறக்க வேண்டும் என வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கிறேன்" எனவும் தமது வாழ்த்து செய்தில் கிழக்கு மாகாண ஆளுநர் கூறியுள்ளார்.



# காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய தைப்பொங்கல் விசேட, செப்புப்பூசைகள்



(வி.ரி. சகாதேவராஜா)

தைப் பொங்கலை யொட்டி வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில்தைப்பொங்கல் விசேட பூசையும் செப்பு பூசையும் இன்று நடைபெற்றன.

ஆலய கப்புகனார் வழமைபோல பாரம்பரிய செப்பு பூசையை நடத்தி வைத்தார்.

## இனிய தைப்பொங்கல்

பச்சரிசி அச்சுவெல்லம்
புதுமண் பானையோடு
மணக்கும் மஞ்சள்
கிழங்கு
வைத்து....

வெட்டி வைத்த
கரும்பும் நட்டு வைத்து..

பச்சரிசி மாக்கோலம்
மண்ணில் இட்டு..
உழவன் உன்னத
வாழ்வு செழிக்க..

ஊரெல்லாம் பசுமையில்
திளைக்க..

விளைச்சல் தந்த
இயற்கை எனும்
இறைவனுக்கு
நன்றி சொல்லி..

ஊர் கூடி உறவு கூடி
பொங்கலிட்டு ....


அகிலம் எல்லாம்
அன்பால் சிறந்து
பொங்கலோ பொங்கல்
என்று பொங்கட்டும் இந்த
தை பொங்கல்
நன்னாளில்.....

தமிழர் திருநாளாம்
இனிய தை பொங்கல்
திருநாள்
நல்வாழ்த்துக்கள்
உலக வாழ் அனைத்து
தமிழ் உறவுகளுக்கும்
உரித்தாகட்டும்.

–எம்.எப்.நவாஸ்



# மாலைதீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களை மார்ச் 15க்குள் திரும்பப் பெறுமாறு வலியுறுத்து!



மாலைதீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களை மார்ச் 15 க்குள் திரும்பப் பெறுமாறு அந்நாட்டு அதிபர் முகமட் மூயிஸ் இந்திய மத்திய அரசை வலியுறுத்தினார்.

சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு சனிக்கிழமை மாலைதீவுக்குத் திரும்பிய பின்பு அவர் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

மாலைதீவில் அந்நிய நாட்டுப் படை வீரர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதாக தேர்தல் வாக்குறுதி அளித்து, கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று மாலைதீவின் புதிய அதிபர் முகமட் மூயிஸ் பதவியேற்றார்.

சீன நாட்டின் ஆதரவாளராகக் கருதப்படும் அவர், அதிபராகப் பதவியேற்றவுடன் மாலைதீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களைத் திரும்பப் பெறுமாறு இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

எனினும், அங்கு இந்திய ராணுவம் இருப்பதைத் தொடர்வதற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தி, இந்தியா உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்தது. இந்தக் குழுவின் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இது தொடர்பாக மாலைதீவு அதிபர் அலுவலக அமைச்சர் இப்ராஹிம் கலீல் கூறுகையில், 'மாலைதீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களைத் திரும்பப் பெறுவது தொடர்பாக, இந்தியாவுடன் அதிகாரப்பூர்வப் பேச்சுவார்த்தை ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இதற்காக இருநாடுகளும் தீர்மானித்தபடி உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மாலைதீவில் இந்தியா மேற்கொண்டு வரும் திட்டங்களை துரிதப்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கும்' என்று தெரிவித்தார்.

மாலைதீவு வெளியுறவு அமைச்சகத் தலைமையகத்தில் நடைபெற்ற உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டத்தில், அந்நாட்டுக்கான இந்திய தூதர் முனு மஹாவரும் பங்கேற்றார்.

இதைத்தொடர்ந்து மாலைதீவு தலைநகர் மாலியில் அந்நாட்டு அதிபர் அலுவலகப் பொதுக் கொள்கைச் செயலர் அப்துல்லா நசீம் தகவல் வழங்கியபோது, மாலைதீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களை மார்ச் 15 க்குள் திரும்பப் பெறுமாறு அதிபர் மூயிஸ் இந்திய அரசிடம் முறைப்படி கோரியுள்ளார், என்று தெரிவித்தார்.

மாலைதீவுக்கு மருத்துவ உதவி மற்றும் கடல் கண்காணிப்புக்காக அதிநவீன இலகுரக ஹெலிகொப்டர்கள், டார்னியர் வகை சிறிய ரக விமானம் ஆகியவற்றை இந்தியா வழங்கியுள்ளது. அவற்றை அந்நாட்டில் பராமரித்து, இயக்குவது உள்ளிட்ட பணிகளில் 88 இந்திய ராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளதாக மாலைதீவு அரசு தெரிவித்துள்ளது.

இதுதவிர, இந்தியாவுடன் மேற்கொள்ளப் பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இருதரப்பு ஒப்பந் தங்களையும் அந்நாடு மறு ஆய்வு செய்து வருகிறது.

அண்மையில் சீனா சென்ற மாலைதீவு அதிபர் மூயிஸ், சீனாவுடன் மாலைதீவை நெருக்கமாக இணைக்க முயற்சிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

பல விவகாரங்களில், குறிப்பாக எல்லைப் பிரச்சினைகளில் இந்தியா – சீனா நாடுகளுக்கு இடையே கருத்து வேறுபாடு நிலவி வரும் சூழலில், மூயிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளமை பல தரப்பினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

மாலைதீவில் இந்திய ராணுவத்தினர் தொடர்ந்து இருப்பதற்குத் தீர்வு காண்பதற்கான ஆலோசனையை இருநாட்டு உயர்நிலைக் குழு மேற்கொண்டது என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'மாலைதீவு மக்களுக்கு மருத்துவம், மனிதாபிமான உதவி களை தொடர்வதற்கு இந்திய ராணுவத்தினரின் பங்கு தேவைப்படுகிறது. இது தொடர்பாக செயல்படுத்தக்கூடிய தீர்வு குறித்து உயர்நிலைக் குழு ஆலோசனை நடத்தியது. இந்தக்குழுவின் அடுத்த ஆலோசனை டில்லியில் நடைபெறும்', என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# கொலம்பியாவில் நிலச்சரிவு உயிரிழப்பு 37 ஆக அதிகரிப்பு



தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆக அதிகரித்துள்ளது.

குயிபோ, மெடெலின் நகரங்களுக்கு இடையிலான மலைப் பகுதியில் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த மேலும் சிலரது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, இந்தப் பேரிடரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆக அதிகரித்துள்ளது என்று அதிகாரிகள் கூறினர். எனினும், காயமடைந்தவர்களின் அண்மை விவரத்தை அவர்கள் வெளியிடவில்லை.

மழை காரணமாக இந்த நிலச்சரிவு ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. (04)

# இந்தியா - நேபாளம் நாடுகளுக்கு இடையே உறவை மேலும் வலுப்படுத்தத் தீர்மானம்



இந்தியா - நேபாளம் நாடுகளுக்கு இடையே எல்லை கடந்த இணைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், இருதரப்புத் திட்டங்களை மேற்கொள்ள இருநாடுகளும் தீர்மானித்துள்ளன.

நேபாள தலைநகர் காட்மண்டில் இந்திய – நேபாள வர்த்தகம், போக்குவரத்து மற்றும் ஒத்துழைப்புக்கான அரசு துணைக் குழு கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இந்திய மத்திய வர்த்தகத் துறை இணைச் செயலர் விபுல் பன்சால் தலைமையில் இந்திய குழு பங்கேற்றது. நேபாளத் தரப்பில் அந்நாட்டு வர்த்தகத் துறை இணைச் செயலர் ராம்சந்திர திவாரி தலைமையிலான குழு கலந்துகொண்டது.

இந்தியா - நேபாளம் நாடுளுக்கு இடையே எல்லை கடந்த இணைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலான இருதரப்புத் திட்டங்கள் மீது கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இந்தியா - நேபாளம் நாடுகளுக்கு இடையே ரயில் வழித்தடங்கள், புதிய ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் ஆகியவற்றை இருநாடுகள் சேர்ந்து கட்டமைப்பதும் அந்த திட்டங்களில் அடங்கும்.

இந்திய, நேபாளச் சந்தைகளில் தங்கள் மருந்துப் பொருள்கள், ஆயுர்வேத பொருள்களை இருநாடுகளும் விற்பனை செய்வது தொடர்பாகவும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)



# பாலமுனை ஹப்பி கிட்ஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த விடுகை விழாவும் பரிசளிப்பும்



(நூருல் ஹுதா உமர்)

பாலமுனை கொலிஜ் ஒப் ஹாப்பி கிட்ஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த விடுகை விழாவும், பரிசளிப்பு வைபகமும் பாலர் பாடசாலை பணிப்பாளர் றிஸ்மியா ஹானின் தலைமையில் அட்டாளைச்சேனை ஷக்கி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

பாலர் பாடசாலை மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டும் விதமாக பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்ற வருடாந்த விடுகை விழாவும், பரிசளிப்பு வைபகமுமான இந்நிகழ்வில் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் தலைவருமான எஸ்.எம்.சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குழந்தைகளின் உளவியல், தலைவர்களாக குழந்தைகளை உருவாக்க வேண்டிய அவசியம், இன்றைய சமூக நீரோட்டத்தில் குழந்தை வளர்ப்பின் சவால்கள், பெற்றோர்களின் அவசர கால வேளைகளில் குழந்தைகள் பாதிக்கப்படும் விதம் தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் மேலும் அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் அதிபர் எஸ். எம். எம். ஹனிபா, அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஏ.பி.பதுறுதீன், ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் கலாநிதி அபூசாலி ரசீது, ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல். மன்சூர் உட்பட சமூக செயற்பாட்டாளர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். மாணவர்களை வாழ்த்தி பாடசாலைகளுக்கு வழியனுப்பி வைத்த இந்நிகழ்வில் நினைவுப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# கொழும்பு விமான நிலையத்தில் தைத்திருநாள் நிகழ்வுகள்



(அஸ் ஹர் இப்றாஹிம்)

தமிழ் கலாசார பாரம்பரியங்களை பிரதிபலிக்கும்வகையில் பண்டாரநாயகசர்வதேச விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் நிறுவனம் தைப் பொங்கல் நிகழ்வொன்றை ஒழுங்கு செய்திருந்தனர்.

விமான நிலையத்தில் கோலம் போட்டு அலங்கரித்து வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் குங்குமம் கொடுத்து வரவேற்கப்பட்டனர்.






# ஹொக்கி லயன்ஸ் கழகத்திற்கு ஹொக்கித்தடிகள் அன்பளிப்பு

(காரைதீவுச் செய்தியாளர்)

காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்திற்கு "அஸ்கோ" அமைப்பினர் ஒரு தொகுதி ஹொக்கித்தடிகளை வழங்கி வைத்தனர்.

கழகத்தின் தலைவர் தவராசா லவன் தலைமையில் கழகத்தின் வருடாந்த ஒன்று கூடலும் கழக இரவும் இடம்பெற்ற வேளையில் அவை வழங்கி வைக்கப்பட்டன.

காரைதீவு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அந்த நிகழ்வில் அதிதிகளாக கழக போசகர் வி.ரி. சகாதேவராஜா அமைப்பின் செயலாளர் ச. நந்தகுமார் பொருளாளர் ம. சுந்தரராஜன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

கடந்த வருடம் மாகாண மட்டத்தில் சாதனை நிலைநாட்டியதற்கான சான்றிதழ்கள் கழக வீரர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் கொழும்புச் செயற்குழுக் கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் கொழும்புச் செயற்குழுக் கூட்டம் நேற்று கொழும்பு 7, தேசிய நூலகம் மற்றும் ஆவணச் சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் கட்சியின் பொருளாளரும், ஸ்தாபகரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அதிதி பேச்சாளர்களாக ஏ.எல்.ஏ. அஸீஸ், எம். எச். ஹாஃபில் ஆகியோர் கலந்து கொண்டு அரசியல் போக்குகள், இலங்கை அரசியலின் எதிர்காலம், தேர்தல்கள் தொடர்பில் கருத்துரைத்தனர்.

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.எம் காதர், ஏ.முஸம்மில் ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் இந்த கொழும்புச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அல்ட்ராசோனிக் டிசெக்டர் உபகரணம்



(சியாத்.எம். இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூடத்தின் மிக நீண்டகால தேவையாக இருந்த அல்ட்ராசோனிக் டிசெக்டர் உபகரணம் வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ரீ.எஸ்.ஆர். ரீ.ஆர்.றஜாப் அவர்களினால் வைத்திய நிபுணர்களிடம் உத்தியோகபூர்வமாக கடந்த வியாழக்கிழமை (11) கையளிக்கப்பட்டது.

கமரா தொழிநுட்பத்துடன் கூடிய சத்திர சிகிச்சைகளிற்கு இவ்வுபகரணம் மிகவும் பயனுள்ளதாகும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலைமையில் வைத்திய அத்தியட்சகரின் முயற்சியின் பயனாக சுமார் 9.5 மில்லியன் பெறுமதியான இந்த உபகரணத்தினை சுகாதார அமைச்சிடம் இருந்து பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தாய்வானின் அதிபர் தேர்தலில் அமெரிக்க ஆதரவுக் கட்சி வெற்றி



தாய்வானில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் இதில் அமெரிக்க ஆதரவு கட்சியான ஜனநாயக முன்னேற்ற கட்சியின் வேட்பாளர் லாய் சிங் டி வெற்றி பெற்றார்.

சீனாவில் கடந்த 1911 ஆம் ஆண்டில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, சீன தேசிய கட்சி ஆட்சியை கைப்பற்றியது. கடந்த 1927 ஆம் ஆண்டில் சீன தேசிய கட்சிக்கு எதிராக, சீன கம்யூனிஸ்ட் கட்சி போர்க் கொடி உயர்த்தியது. இதன் காரணமாக 1949ஆம் ஆண்டு வரை சீனாவில் உள் நாட்டுப் போர் நீடித்தது.

இந்தப் போரில் தோல்வியை தழுவிய சீன தேசிய கட்சியினர், தென் சீன கடலில் 168 தீவுகள் அடங்கிய தாய்வானில் குடியேறி ஆட்சி நடத்தினர். அந்தப் பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.

சர்வதேச அரங்கில் தற்போது 14 நாடுகள்மட்டுமே தாய்வானை தனி நாடாக அங்கீகரித்துள்ளன. சீனாவின் நிர்ப்பந்தம் காரணமாக அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கூட தாய்வானை தனி நாடாக அங்கீகரிக்கவில்லை. எனினும் ராணுவ ரீதியாக தாய்வானுக்கு அமெரிக்கா பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இந்த சூழலில் தாய்வான் அதிபர் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஆளும் ஜனநாயக முற்போக்குக் கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபர் லாய் சிங் டி, பிரதான எதிர்க் கட்சியான குவோமின்டாங் சார்பில் ஹவ் யூ, தைவான் மக்கள் கட்சி சார்பில் கோ வென் ஜி ஆகியோர் போட்டியிட்டனர்.

அந்த நாட்டின் 2.5 கோடி மக்கள் தொகையில் 1.9 கோடி பேர் வாக்குரிமை பெற்றுள்ளனர். காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப் பதிவு நடைபெற்றது. ஒட்டுமொத்தமாக 70 சதவீத வாக்குகள் பதிவாகின. வாக்குப் பதிவு நிறைவடைந்ததும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சி அமெரிக்க ஆதரவு கட்சியாகும். குவோமின்டாங் கட்சி சீன ஆதரவு கட்சியாகும்.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதல் ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சியின் வேட்பாளர் லாய் சிங் டி முன்னிலையில் இருந்தார். இறுதிச் சுற்று வாக்கு எண்ணிக்கையில் அவர் 53.74 லட்சத்துக்கும் அதிகமாக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

குவோமின்டாங் கட்சி வேட்பாளர் ஹவ் யூ-க்கு 44.59 லட்சம் வாக்குகள் கிடைத்தன.

இந்த நிலையில், சீன பாதுகாப்புத் துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில், தாய்வான் விவகாரத்தில் சீன மக்கள் விடுதலைப் படை எதற்கும் தயார் நிலையில் இருக்கிறது. தாய்வானை சுதந்திர நாடாக அறிவிக்க முயன்றால், அந்த முயற்சியை நசுக்குவோம்" என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

இதற்குப் பதிலடியாக பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள அமெரிக்க ராணுவ தளத்தில் அதிக அளவிலான ஆயுதங்கள், எரிபொருட்கள் குவிக்கப்பட்டு வருவதாகவும், அமெரிக்க போர்க்கப்பல்கள், விமானங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. (04)






# அம்பாறை மக்கள் பிரச்சினைகள் பொலிஸ் உபதேச குழுக் கூட்டம்



(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் உபதேச குழுக்களை ஒன்றிணைத்து ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடல் கெப்சோ அமைப்பின் ஏற்பாட்டில் அம்பாறையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என். ஜயபத்ம தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது, நிகழ்வின் பங்காள அமைப்பான கெப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளரும், உபதேசக் குழுவின் தவிசாளருமான ஏ.ஜே.காமில் இம்டாட், பொலிஸ் உயரதிகாரிகள், அம்பாறை மாவட்டத்தில் செயற்பட்டு வரும் பொலிஸ் உபதேசக் குழுக்களின் பிரதிநிதிகள், சமூகப் பொலிஸ் சேவைப் பிரிவின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இவ்வருடத்தின் முதலாவது விஷேட மாவட்ட குழு கூட்டத்தின் போது அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டதுடன், பொலிஸ ாரும் பொது மக்களும் இணைந்து இம்மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 23 பொலிஸ் நிலையங்களின் கீழ் செயற்பட்டு வரும் உபதேசக் குழுக்கள் மற்றும் பொலிஸார் போன்றோர் இணைந்து பிரதேச ரீதியாக காணப்படும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் போன்றவற்றைக் கண்டறிந்து சிறந்த சமுதாயத்தினைக் கட்டியெழுப்பும் வகையிலான வேலைத் திட்டத்தினையும் நடைமுறைப் படுத்துதல் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இதன் போது அம்பறை மாவட்டத்தில் உள்ள தீய பழக்க வழக்க செயற்பாட்டாளர்களை சீர்திருத்துதல், மக்கள் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கான செயன்முறையனை மேற்கொள்ளல், மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்.ஜயபத்ம சுட்டிக்காட்டியதுடன் இதற்கென அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண் டுமெனவும் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.01.2024 இல் வெளியிடப்பெற்றது.